SOFA-I-M

## மூன்றாம் இடைப்பருவத் தேர்வு

தமிழ்

மதிப்பெண்: 50

வகுப்பு - ஆறு - ________

நேரம்: 2மணி

| | |
|---|---|
| பள்ளியின் பெயர்: ______ | மாணவன்/மாணவி பெயர்: ______ |
| இடம்: ______ | வரிசை எண்: ______ |

**I. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** $8 \times 1 = 8$

1. தேசம் உடுத்திய நூலாடை எனக் கவிஞர் குறிப்பிடும் நூல் ______

   அ) திருவாசகம் ஆ) திருக்குறள் இ) திரிகடுகம்

2. காந்தியடிகளிடம் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர் ______

   அ) கோவை ஆ) சிதம்பரம் இ) மதுரை

3. சோம்பல் என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச்சொல் ______

   அ) சுறுசுறுப்பு ஆ) துன்பம் இ) சோகம்

4. வாழ்வில் உயர கடினமாக ______ வேண்டும்.

   அ) பேச ஆ) நடக்க இ) உழைக்க

5. நூலாடை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______

   அ) நூல் + ஆடை ஆ) நூலா + டை இ) நூல் + லாடை

6. தானென்று என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______

   அ) தா + னென்று ஆ) தான் + என்று இ) தான் + னொன்று

7. எதிர் + ஒலிக்க என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ______

   அ) எதிர்ஒலிக்க ஆ) எதிர்ரொலிக்க இ) எதிரொலிக்க

8. தம் + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

   அ) தம்முயிர் ஆ) தம்உயிர் இ) தமுஉயிர்

**II. பொருத்துக.** 4

9. அ) இலக்கிய மாநாடு - பாரதியார்

   ஆ) தமிழ்நாட்டின் சொத்து - சென்னை

   இ) குற்றாலம் - ஜி.யு. போப்

   ஈ) தமிழ்க்கையேடு - அருவி

**III. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு விடையளி.** $5 \times 2 = 10$

10. தாராபாரதியின் பாடலில் இடம் பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
11. காந்தியடிகள் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் முதலில் ஏன் நுழையவில்லை?
12. வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட நிகழ்வைச் சுருக்கமாக எழுதுக.
13. சொற்களின் வகைகளைக் கூறுக.

14. யாருக்குத் தொண்டு செய்ய வேண்டும்?

15. பழம், வேர் ஆகியவற்றின் இயல்புகள் யாவை?

16. காந்தியடிகள் எவ்வாறு தமிழ்க் கற்றார்?

**IV. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடையளி.** 3 × 3 = 9

17. தாராபாரதி பாடலின் கருத்தைச் சுருக்கி எழுதுக.

18. காந்தியடிகளுக்கும், தமிழுக்கும் உள்ள தொடர்பை எழுதுக.

19. தாயுமானவர் வேண்டுவன யாவை?

20. கலீல் ஜிப்ரான் பற்றிக் குறிப்பு வரைக.

21. காந்தியடிகளின் உடை மாற்றத்திற்குக் காரணமாக அமைந்த நிகழ்வினை எழுதுக.

**V. மனப்பாடப் பாடல்.** 4

22. ‘புல்வெளி’ எனத் தொடங்கும் ‘பாரதம் அன்றைய நாற்றங்கால்’ என்ற பாடலை அடிமாறாமல் எழுதுக.

**VI. வினாக்களுக்கு விடையளி.** 3 × 2 = 6

23. சொற்றொடரில் அமைத்து எழுதுக.

அ) ஆடம்பரம்

24. அகரவரிசைப்படுத்துக.

பெண்கள், பாரதம், புதுமை, பீலி, பேருந்து, பூமி, பழங்கள், பொதுக்கூட்டம், பௌவம், பையன், போக்குவரத்து, பின்னிரவு

25. கீழ்க்கண்ட கட்டங்களில், விடுபட்ட எழுத்துகளை பூர்த்தி செய்யவும். அனைத்து சொற்களும் நீர்நிலைகளை குறிக்கும்.

அ)

| | |
|---|---|
| | தி |

ஆ)

| | | |
|---|---|---|
| | ரு | |

இ)

| | |
|---|---|
| ஓ | |

ஈ)

| | |
|---|---|
| ஆ | |

**VII. கீழ்காணும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.** 5

26. அ) ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது.

ஆ) ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒரு நாள்.

இ) அது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது.

ஈ) அஃது நகரத்திற்குச் செல்லும் சாலை.

உ) அது ஒரு இனிய பாடல்.

**VIII. இறந்த காலத்தை கீழே கொடுக்கப்பட்ட காலத்திற்கேற்ற சொற்களை அட்டவணையில் எழுதுக.** 4

27.

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| அ. நடந்தேன் | | |
| ஆ. சென்றேன் | | |
| இ. வந்தேன் | | |
| ஈ. படித்தேன் | | |